செ. கு. எண்: 087 நாள் : 20.09.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 20.9.2015

கோயம்புத்தூர் மாநகரம், பீளமேடு போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.மாகாளியப்பன் அவர்கள் 11.6.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், கோம்பை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. N.பாண்டியன் அவர்கள் 13.6.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், இரணியல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் 14.6.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. செந்தில் ராஜா அவர்கள் 14.6.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், போதை பொருள் நுண்ணறிவு பிரிவில் (Narcotic Intelligence Bureau) சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. G.மகாதேவன் அவர்கள் 15.6.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் நகர அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த செல்வி சாந்தா அவர்கள் 15.6.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், மணலி போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.பெருமாள் அவர்கள் 18.6.2015 அன்று பொன்னேரி நெடுஞ்சாலை அருகே போக்குவரத்தினை ஒழுங்குப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், எஸ்.வி.மங்களம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. C.சுப்பிரமணி அவர்கள் 18.6.2015 அன்று கொட்டாம்பட்டி அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 20.6.2015 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், வடவள்ளி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A. சேவியர் ஜோசப் ராஜ் அவர்கள் 19.6.2015 அன்று போத்தனூர் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது நிலை தடுமாறி கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 20.6.2015 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், ஜெ.ஜெ. நகர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.கர்ணன் அவர்கள் 20.6.2015 அன்று

திருமங்கலம் சாந்தி காலனி அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது சாலை ஓர மரத்தின் கிளை முறிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மாகாளியப்பன், பாண்டியன், பாலகிருஷ்ணன், மகாதேவன்; தலைமைக் காவலர்கள் செந்தில் ராஜா, சாந்தா, பெருமாள், சுப்பிரமணி, சேவியர் ஜோசப் ராஜ்; முதல்நிலைக் காவலர் கர்ணன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**